அ.வ.எண். 5/2022 நாள்: 13.03.2026

வா.சா.1 திரு. கமால் பாட்சா

<u>சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

6) தாவா சொத்தானது எனது தகப்பனாரின் தகப்பனார் முகமதுஷா ராவுத்தர் என்பவருக்கு சொந்தமானது என்றால் சரியல்ல. எனது தகப்பனார் எனக்கு எத்தனை வயது இருக்கும்போது இறந்துபோனார் என்றால் 21 வயது இருக்கும்போது இறந்துபோனார். எனது தகப்பனாருக்கு நான் கடைசி மகன் என்றால் சரிதான், எனக்கு 3 மூத்த சகோதரிகள், 2 மூத்த சகோதரர்கள் உள்ளனர். என்னுடைய மூத்த சகோதரருக்கு என்ன வயது என்றால் 70 வயது இருக்கும், அவர் உயிருடன்தான் உள்ளார், அவரை கேட்டால் எனது அப்பாவிற்கு சொத்து எப்படி வந்தது என்று கூறுவார் என்றால் அவருக்கு தெரிந்தால் கூறுவார். எனது மூத்த சகோதரரை சாட்சியாக விசாரிக்க தயாரா என்றால் தயார்.

7) எனது தகப்பனார் பெயரில் நான் வரி எந்த வருடத்திலிருந்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் 1980-க்கு முன்பு வரை தாக்கல் செய்துள்ளேன். எனது தகப்பனார் பெயரில் வரி ரசீதுகள் எப்படி ஏற்பட்டது என்று தெரியுமா என்றால் தெரியாது. எனது தகப்பனாருக்கு பட்டா கொடுத்தது எந்த வருடம் என்றால் 1995-ல் பட்டா கொடுக்கப்பட்டது. பட்டா கொடுப்பதற்கு முன்பு எனது தகப்பனார் பெயரில் வரி ரசீது ஏற்பட்டுள்ளது எவ்வாறு என்று தெரியுமா என்றால் தெரியாது. நானும் எனது தகப்பனார் மற்றும் சகோதரர்களும் ஒரே வீட்டில் எத்தனை வருடமாக குடியிருந்தோம் என்றால் எனக்கு 20 வயது ஆகும்வரை 1990-க்கு முன்புவரை குடியிருந்தோம். அதன்பிறகு அபுபக்கர் தெருவில் குடியிருந்தோமா என்றால் இல்லை, வரதராஜபெருமாள்கோவில் தெருவில் வாடகை வீட்டில் 1993 வரை குடியிருந்தோம். அதன்பிறகு பழையபடி (தாவா சொத்துள்ள) மடத்துதெருவிற்கு குடிவந்துவிட்டோம்.

8) மடத்துதெருவில் எந்த வருடம் வரை குடியிருந்தோம் என்றால் ஞாபகம் இல்லை. அபுபக்கத் தெருவில் எந்த வருடம் வரை குடியிருந்தோம் என்றால் 2015 வரை குடியிருந்தோம். தாவா சொத்தின் நீள அகலம் என்ன என்றால் தென்வடல் 36 அடி நீளம், கிழமேலாக 170 அடி. மடத்துத்தெருவிற்கு அடுத்து மேற்கில் தற்போது காலியாக உள்ளஇடத்தில்தான் எனது தகப்பனாரும் நானும் குடியிருந்தோம் என்றால் சரிதான். தாவா சொத்தின் பின்பகுதியில் எனது

தகப்பனாரின் மூத்த சகோதரர் அப்துல் மஜீத் குடும்பத்துடன் குடியிருந்து வந்தார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. எனது தாத்தா முகமதுஷா ராவுத்தர் காலத்திலிருந்து தாவா சொத்திலுள்ள கட்டிடத்தில் எனது தகப்பனார் மற்றும் அவரது சகோதரர்களும் பூர்வீகமாக குடியிருந்து வருகிறார்கள் என்றால் சரியல்ல.

9) எனது தகப்பனாரின் மூத்த சகோதரர் அப்துல் மஜீத் அவருக்குரிய இடத்தில் குடியிருந்து வருகிறார் என்பதற்கு வீட்டு வரி 1975 முதல் செலுத்தி குடியிருந்து வருகிறார் என்றால் அதுபற்றி எனக்க தெரியாது. மேற்படி அப்துல் மஜீத் குடியிருக்கும் வீட்டிற்கு தனியாக மின் இணைப்பு உள்ளதா என்றால் அது யார் பெயரில் உள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. எனது தகப்பனார் குடியிருந்த வீட்டிற்கு தனியாக மின் இணைப்பு எனது தகப்பனார் பெயரில் இருந்தது என்றால் சரிதான், தற்போது எனது பெயரில் மாற்றம் செய்துள்ளேன். எனது தகப்பனார் குடியிருந்த தாவா வீட்டின் முன்பகுதி சிதிளமடைந்து விட்ட காரணத்தால் அதனை இடித்து காலிமனையாகத்தான் தற்போது வரை உள்ளது என்றால் சரிதான்.

10) மேற்படி சிதளமடைந்த வீடு எந்த வருடம் இடிக்கப்பட்டது என்றால் 1997 இடிக்கப்பட்டது. தாவா வீட்டின் பின்புறம் எனது பெரியப்பா அப்துல் மஜீத் குடும்பத்துடன் வசிந்து வந்த இடத்தில் தொடர்ந்து தற்போதும் பிரதிவாதி குடும்பத்துடன் குடியிருந்து வருகிறார் என்றால் சரியல்ல, 1960 முதல் 1980 வரை எனது பெரியப்பா குடும்பம் வசிக்கவில்லை என்று எனது அப்பா என்னிடம் சொன்னார். அவ்வாறு எனது தகப்பனார் என்னிடம் எப்போது கூறினார் என்றால் அவருக்கு உடல்நிலை சரியில்லாதபோது அதாவது 1990-ல் கூறினார். எனது பெரியப்பா தாவா வீட்டின் பின்புறம் தற்போ பிரதிவாதி வசிக்கும் இடத்தில் 1980 முதல் இன்றுவரை வசித்து வருகிறார் என்றால் சரிதான்.

11) எனது தகப்பானருக்கு அடுத்த மூத்த சகோதரர் அப்துல் ரகுமான் இருந்தார் என்று எனது தகப்பனார் என்னிடம் கூறினாரா என்றால் இல்லை. ஏற்கனவே குறுக்கு விசாரணை செய்தபோது பிரதிவாதி தாக்கல் செய்த எதிர்வழக்குரையுடன் தாக்கல் செய்திருந்த வம்சாவளி பட்டியல் குறித்து கேட்டதற்கு தெரியாது என்று கூறினேன். தற்போது அது பற்றி விவரம் கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. வழக்குரையில் பிரதிவாதி தாவா சொத்து அவருக்கு சொந்தம் என்று கூறி ஜமாத்தில் புகார் செய்தார் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி புகார் தொடர்பாக ஜமாத்தில்

அழைத்து பேசினார்களா என்றால் நான் ஜமாத்திற்கு செல்லவில்லை என்சார்பாக எனது மனைவி சென்றார்.

12) ஜமாத்தில் என்ன பேசினார்கள் என்று எனது மனைவி என்னிடம் கூறினாரா என்றால் ஆமாம், பிரதிவாதி தாவா சொத்தை உரிய உரிமையாளரிடமிருந்து கிரையம் பெற்றதற்கான கிரைய ஆவணம் உள்ளதாக தெரிவித்தார் என்று என்னிடம் கூறினார். அதனடிப்படையில்தான் நான் வில்லங்கம் சான்று தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி வில்லங்க சான்று இவ்வழக்கில் வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.6 –ஐ நான்தான் வாங்கினேனா என்றால் ஆமாம். நான் கொடுத்த சொத்துவிவரத்தின் அடிப்படையில்தான் வில்லங்க சான்று வழங்கப்பட்டது என்றால் சரிதான். இஸ்லாமிய சட்டபடி ஆண், பெண் வாரிசுகளுக்கு என்ன பங்கு கொடுக்க வேண்டும் என கூறப்பட்டுள்ளது என்றால் ஆண்களுக்கு 2 பங்கு, பெண்களுக்கு 1 பங்கு என கூறப்பட்டுள்ளது. தாயாருக்கு எவ்வளவு பங்கு ஒதுக்கப்படும் என்றால் தெரியாது.

13) 14.12.2002–ல் என்னுடைய சகோதர, சகோதரிகள், தாயார் பாகவிடுதலை ஆவணம் எழுதிக்கொடுத்துள்ளார்கள் என வா.சா.ஆ.3 தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். எனது தகப்பானருக்கு உள்ள பாகத்தை தவிர மற்ற பாகஸ்தர்களுக்குரிய பாகத்தை எழுதிக் கொடுப்பதற்கு என்னுடைய தாயார், சகோதர, சகோதரிகளுக்கு எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. மேற்படி வா.சா.ஆ.3 சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. அது பிரதிவாதியை எந்த விதத்திலும் கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல.

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்குவிசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.

S.d/ Kamal Batcha

Taken down by me in the open court read over to the witness and admitted by him to be correct.

PANCHANATHAN RAMESH

Digitally signed by PANCHANATHAN RAMESH
Date: 2026.03.13 18:10:16 +0530

DISTRICT MUNSIF, THIRUVAIYARU